பேசுவதற்கு அழைக்கவா? (குறுக்கீடு) ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று எவ்வளவு நேரம் பேசுவீர்கள்? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைக் காடுகள், வனச் சட்டம், பிரிவு 26–ன்படி வன நிலமாக அறிவிக்கப்பட்டது. 45 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு வன நிலங்களை காப்புக் காடாக அறிவிக்கும்முன்பு, வன நிர்ணய அலுவலர் அங்கு வாழும் பழங்குடி இனத்தவரின் உரிமைகளை நிர்ணயிக்க முற்படும் முயற்சியை மேற்கொண்டார். மத்திய அரசின் Forest Rights Act, 2006–ன்படி, 8,218 மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்களின்மீது பழங்குடியினர் நலத் துறை, வனத் துறை, வருவாய்த் துறை அடங்கிய குழு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உரிமம் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. அதன்படி பெறப்பட்ட 8,218 மனுக்களில், 1,089 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 7,129 மனுக்களுக்கு நில அளவை செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, நீங்கள் உரையை முடித்துவிடுகிறேன் என்று சொன்னால் பரவாயில்லை. புது point பேசுவதற்கு நான் allow செய்யவில்லை. (குறுக்கீடு) இல்லை, நேரமில்லை திரு. உதயசூரியன் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

8. அனைத்து மானியக் கோரிக்கை விவாதங்களிலும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்குதல்

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தியை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து, தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன். இன்றைக்கு பேசுவோர் பட்டியலை நான் பார்த்தேன். இதில் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தும், ஆளும் கட்சியிலிருந்தும்தான் பேசுகிறார்கள். காங்கிரஸ் கட்சியிலிருந்து எவரும் இல்லை. காரணம் அவர்கள் அதிக அளவு

எண்ணிக்கையில் இல்லை என்று தாங்கள் கருதியதாக நான் அறிகிறேன். அவர்கள் நம்முடனே இருக்கிறவர்கள். வேண்டுமானால் நாங்கள் பேசுவதில் 3 நிமிடங்கள் குறைத்துக்கொள்கிறோம். நீங்கள் பேசுவதில் 3 நிமிடங்கள் குறைத்துக் கொள்ளுங்கள். 5 நிமிடங்கள் கொடுங்கள், சரியாகப் போய்விடும். நமக்கு வாய்ப்பில்லை என்று போய்விட்டார்கள். அது மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. எவ்வளவோ சண்டை வருகிறது. நீங்கள் மனது வைத்தால் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டு 5 நிமிடங்கள் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் இருந்தீர்கள்.*

திரு. துரைமுருகன்: *அங்கு சொன்னேன், அலுவல் ஆய்வுக் குழு ஒரு* Constitution *இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை.*

திரு. துரைமுருகன்: *இப்பொழுது நான் வாதத்திற்கே வரவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாதத்திற்கு உட்பட்டதுதான். அதெல்லாம் இல்லையென்று சொல்லவில்லை.*

திரு. துரைமுருகன்: *ஒரு கருத்தைச் சொல்கிறேன். ஒரு கட்சியில் இருக்கிறார்கள், அவர்களுக்கு 5 நிமிடங்கள் கொடுத்தால் போதும். இது ஒன்றும் பெரிய விஷயம் கிடையாது. ஒரு மாதிரியாகப் போய்விடும். இன்றைக்கு வேண்டாம். நாளையிலிருந்து வாய்ப்பு கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்களே வந்து நாங்கள். . . (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *ஒன்றாக இருக்கிற நமது சக உறுப்பினர்கள் தங்களுக்கு வாய்ப்பு இல்லையென்று அவர்கள் மனது வருத்தமாகச் செல்லும்போது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வருத்தம் ஒன்றும் இல்லை. என்னவென்று பார்க்கலாம்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு முதல்வரும் இதில் தலையிட்டால் முடியும் என்று நான் கருதுகிறேன். அவை முன்னவரும், முதல்வரும் கொஞ்சம் கருணை செய்ய வேண்டும். 5 நிமிடம் கொடுங்கள். 5* minutes *கொடுங்கள், போதும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தினமும் வாய்ப்பு கொடுத்தோமென்றால். . . (குறுக்கீடு) இருப்பது 23 நாட்கள். மொத்தம் இருப்பதே அக்கட்சியில் 7 உறுப்பினர்கள்தான். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: நான் இவ்வளவு நேரம் பேசிய இந்த நேரம்கூட வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குப் பேசுவதற்கான உரிமை இருக்கிறது. திரும்பவும் அரை மணி நேரம், அரை மணி நேரம் பேசுகிறார்கள். (குறுக்கீடு) நீங்களே என்னிடம் இரண்டரை மணிக்கு அவையை முடியுங்கள் என்று சொன்னீர்கள். நான் இரண்டரை மணிக்கு அவையை எப்படி முடிப்பது என்று தடுமாறிக் கொண்டிருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: அது ஒத்துவராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே ஒரு பக்கம் என்னைச் சீக்கிரம் அவையை முடிக்கச் சொல்கிறீர்கள். இன்னொரு பக்கம் நிறைய வாய்ப்பு கொடுக்கச் சொல்கிறீர்கள். என்ன என்பதை நான் அழைத்துப் பேசுகிறேன். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: Right, right.

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

பிற்பகல் 1–40

***திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தோரை வாழ வைக்கும் மாநகராம் திருப்பூர் மாநகரத்திலே, 2016 ஆம் ஆண்டைய காலகட்டங்களிலே சாய சலவைப் பட்டறைகளிலிருந்து வெளியேறுகின்ற நீரை பூஜ்ய நிலை அளவுக்கு சுத்திகரிப்பு செய்ய முடியாத நிலையிலே, சாய சலவைப் பட்டறை தொழிற்சாலைகளெல்லாம் மூடப்படுகின்ற நிலை இருந்த நேரத்திலே, 2011 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் வாக்கு கேட்பதற்காக திருப்பூர் மாநகரத்திற்கு வருகை தந்த, மறைந்தும்